அ.வ.எண்: 11/2019 நாள்: 04.03.2026

பி.வா.சா.2 – ரவீந்திரன்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் 1ம் பிரதிவாதியிடம் 2019 ஆம் ஆண்டு சொத்தை கிரையம் பெறும்போது அவருக்கு என்ன வயது இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு பூர்வீகம் பொய்யாமனியாகும் ஆனால் தற்போது சென்னையில் குடிபெயர்ந்து விட்டோம். தாவா சொத்து நஞ்சையா, புஞ்சையா அல்லது மனை இடமா என்றால் அது காலியிடம் ஆகும். தாவா சொத்து என்ன வகைப்பாடு என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து மேற்படி சொர்ணம் அம்மாளுக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் அது அவரது சொந்த பணத்தில் வாங்கிய சொத்து ஆகும். தாவா சொத்தை கிரையம் கொடுக்கும்போது சொர்ணம் அம்மாளின் கணவர் இறந்து எத்தனை வருடங்கள் ஆகியிருந்தது என்றால் நான் வாங்கும் பொழுது அவரது கணவர் உயிருடன் இல்லை, ஆனால் அவர் எப்பொழுது இறந்தார் என்று எனக்கு தெரியாது. எனக்கு தாவா சொத்தை யார் அடையாளம் காட்டியது என்றால் செந்தில் என்பவர் அடையாளம் காட்டினார். மேற்படி செந்தில் எனக்கு

என்ன உறவு முறை வேண்டும் என்றால் எனது அண்ணன் மனைவியின் தாய்மாமன் ஆவார்.

2. நான் எதற்காக தாவா சொத்தை வாங்கினேன் என்றால் விவசாயம் செய்வதற்காக வாங்கினேன். தாவா சொத்து பிரச்சனைக்குரிய சொத்து என்பது எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, நான் நன்றாக விசாரித்து வில்லங்கம் இல்லாததால் தான் மேற்படி சொத்தை வாங்கினேன். யாரிடம் விசாரணை செய்தேன் என்றால் எனது தந்தையும் மேற்படி செந்தில் அவர்களும் தான் விசாரித்தார்கள். யாரிடம் விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது. மேற்படி விசாரணை செய்தது குறித்து ஆவணங்கள் எதுவும் வைத்திருக்கிறேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்து சம்பந்தமாக சட்ட கருத்துறை வாங்கியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். யாரிடம் மேற்படி சட்ட கருத்துறை வாங்கினேன் என்றால் சென்னையில் எனது தந்தை மற்றும் மேற்படி செந்தில் அவர்கள் தான் வாங்கினார்கள் அது பற்றி எனக்கு தெரியாது.

3. மேற்படி கிரையம் வாங்கும்பொழுது யார் சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்றால் சொர்ணம் அம்மாவின் இரண்டாவது மகன் அன்பு மற்றும் செந்தில் ஆகியோர் சாட்சி கையெழுத்து செய்தனர். மேற்படி அன்பு என்பவருக்கு நோய் இருப்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவரின் முழு பெயர் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அன்பு என்பவர் 20 வருடங்களாக பக்கவாத

நோயினால் பாதிக்கப்பட்டுள்ளது எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அன்பு என்பவர் கிரைய பத்திரத்தில் கைநாட்டு வைத்தாரா அல்லது தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ கையெழுத்து செய்தாரா என்றால் எனக்கு நினைவில் இல்லை ஆவணத்தை பார்த்தால் தான் தெரியும். மற்றொரு சாட்சியான செந்தில் எனக்கு உறவினர் என்றால் சரிதான். மேற்படி சொர்ணம் அம்மாள் எவ்வாறு சம்பாதித்து தாவாசொத்தை வாங்கினார் என்றால் விவசாயம் பார்த்தும் மற்றும் நகைகளை வைத்தும் தாவாசொத்தை வாங்கி இருந்தார்.

4. மேற்படி சொர்ணம் அம்மாள் யாருடைய நகையை வைத்து வாங்கினார் என்றால் அது பற்றி விபரங்கள் எனக்கு தெரியாது. சொர்ணம் அம்மாளின் கணவர் என்ன வேலை பார்த்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி துரைராஜ் என்ன வேலை பார்த்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியின் பெண்மக்கள் கிரைய ஆவணத்தில் கையெழுத்து செய்தார்களா என்றால் அவர்கள் வந்தார்கள் ஆனால் கையெழுத்து செய்யவில்லை. அவர்கள் வந்ததற்கான ஆதாரம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி 1ம் பிரதிவாதியின் பெண் மக்களும் தாவா வழக்கில் தரப்பினராக உள்ளனர் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். எத்தனை பெண் மக்கள் 1ம் பிரதிவாதிக்கு உள்ளனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . 1ம் பிரதிவாதியின் பெண்மக்கள் தாவா வழக்கில் எதிர்வழக்காடுகிறார்களா என்றால் சரிதான். அவர்கள் எவ்வாறு எதிர்வழக்காடுகிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது

பற்றி எனக்கு தெரியாது. வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தாவாசொத்தில் அவருக்கும் பங்கு உள்ளது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

5. தாவா பிராதை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன்.எதன் அடிப்படையில் வாதி அதில் பங்கு கோருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா வழக்கில் 1ம் பிரதிவாதிக்கு நான் தான் வழக்கறிஞர் வைத்து எதிர்வழக்காடுகிறேன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி அன்பு எனக்கு ஆதரவாக இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பாரா என்றால் சாட்சியம் அளிப்பார். நான் 1ம் பிரதிவாதியை மோசடியாக ஏமாற்றி கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வயதான விதவை பெண் என்பதாலும் 2ம் பிரதிவாதி பல வருடங்களாக பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டு உள்ளதாலும் அவர்கள் இருவரையும் ஏமாற்றி நான் தாவாசொத்தை கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களும் மோசடியான ஆவணங்கள் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.03.04 16:13:07 +0530